# ஐந்து பிரதான வீதிகள் குண்டு வைத்து தகர்ப்பு!

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 1 15-1-1985 செவ்வாய்மெமை (இரத்தாக்ஷி தை 2) முழக்கம் 174

## பருத்தித்துறைப் போக்குவரத்து முழுமையாக ஸ்தம்பித நிலையில்!

நெல்லியடி, பருத்தித்துறைப் பகுதிகளை யாழ்ப்பாணம், சாவகச்சேரி கொடிகாமம் ஆகிய பகுதிகளுடன் இணைக்கும் மூன்று முக்கியமான பாதைகளில் இருக்கும் நான்கு பாதைகள் உட்பட மொத்தம் ஐந்து பிரதான பாதைகள் யாழ்ப்பாணத்தில் நேற்று அதிகாலை குண்டு வீச்சினால் தகர்க்கப்பட்டன இதனால் பருத்தித்துறைக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையிலான பிரதான பஸ் சேவைகள் ஓடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வல்லை வெளிக்கும் அச்சுவெலிக்குமிடையிலுள்ள பால வீதி, கரவெட்டியிலிருந்து சரசாலைக்குச் செல்லும் வீதி, வரணி வடக்கு வீதி, புத்தூர் சரசாலை வீதி, கோப்பாய் கைதடி வீதி ஆகியவைகளே குண்டுவைத்துத் தகர்த்தப்பட்டன இதனால் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு தொண்டமானாறு வீதியூடாக கடற்கரை ஓரமாக மட்டுமே இப்போது செல்லக் கூடியதாகவிருக்கின்றது

கடந்த 48 மணித்தியாலமாக குடாநாட்டில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கிடையே நேற்று அதிகாலை 2 30 மணிக்கும் 4 மணிக்குமிடையே பலத்த சத்தத் —4-ம் பக்கம்பார்க்க

# ராஜீவை கூட்டணி தலைவர் சனியன்று சந்தித்தனர்

# அரசியல் தீர்வே வேண்டுமென ராஜீவ் அக்கறை!

(புதுடில்லி)

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் மு சிவசிதம்பரம், அ அமிர்தலிங்கம், இரா. சம்பந்தன் ஆகிய மூவரும் கடந்த சனிக்கிழமை இரவு பாரதப்பிரதமர் ராஜீவ் காந்தியை தனிமையில் சந்தித்து நீண்ட நேரமாக இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி உரையாடினர். பாரத அரசின் வெளியுறவுக் கொள்கைக் குழுத்தலைவர் திரு. ஜி பார்த்த சாரதியும் இச்சந்திப்பில் பங்குபற்றினர்

1983 ஜூலை கலவரத்திலிருந்து தற்போதுள்ள பிரச்சினை வரை சகல விபரங்களையும் கூட்டணித்தலைவர்கள் ஆதியோடு அந்தமாக ராஜீவிடம் எடுத்துக்கூறினர். இச்சந்திப்புப் பற்றி மேலதிக விபரங்கள் எதுவும் வெளிபிடப்படவில்லை.

இதற்கிடையே நேற்றுத் தனது தொகுதியான அமைதியில் செய்தியாளர்கள் மத்தியில் ராஜீவ்காந்தி பேசுகையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றின் மூலமே முடிவுகாண முடியுமென்று சொன்னார்.

''இது ஒரு உள்நாட்டுப்பிரச்சினையாக இருந்தாலும் அங்கிருந்து இங்கு வந்துள்ள அகதிகள் நிலையினால் மனிதாபிமான ரீதியில் இந்தியா தலையிட வேண்டியுள்ளது.'' என்று சொன்னார்,

''இந்தியா வந்துள்ள அகதிகள் ஏற்றுக்கொள்ளும் வகையில் அரசியல் தீர்வு காண வேண்டும்'' எனவும் அவர் சொன்னார்.

# கிளிநொச்சியில் நேரடி மோதல்!

# சார்ஜன்ட் குண்டுவீச்சுக்குப் பலி

## சீருடை, ரைபிள் அபகரிப்பு இருகொலை; பல தீவைப்புகள்

(கிளிநொச்சி நிருபர் மு. விவேகானந்தன்)

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கருகாமையில் பொலிஸாருக்கும் இளைஞர் கோஷ்டியொன்றுக்கு மிடையே இடம்பெற்றதாகக் கூறப்படும் நேரடி மோதலொன்றினபோது பொலிஸ் சார்ஜன்ட் சிறிபால ஸ்தலத்திலேயே குண்டுவீச்சுக்குப் பலியானதாக தெரியவந்துள்ளது. மற்றொரு பொலிஸ் கான்ஸ்டபிள் படுகாயந்துக்குள்ளானர். மரணமான சார்ஜன்ட் அணிந்திருந்த சீருடையையும், அவரிடமிருந்து 'றைபிளையும்' இளைஞர்கள் அபகரித்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து மூன்று ஜீப்புகளில் வந்த சீருடையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் கரடிப்போக்குச் சந்தியில் இளைஞர் ஒருவரும், கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு முன்னால் வயோதிபர் ஒருவரும்மரணமானர்கள்.

கரடிப்போக்குச் சந்தியில் —4-ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாண பாடசாலைகள் ஒரு நேரத்துடன் மூடப்படும்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகளை காலை 8 30 மணி முதல் பகல் 1 30 மணிவரை நடத்துவதுபற்றி இன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படலாம்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. எல். விஜேமானவுடன் தொடர்பு கொண்டு இங்கு நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு, போக் —4-ம் பக்கம் பார்க்க

## பொலிஸார் கைது செய்த சிவானந்தனைக் காணவில்லை

(திருமலை)

உப்புவெளிப் பொலிஸாரால் நான்கு தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் தொலை தொடர்புத்திணைக்கள ஊழியர் ஒருவரைக் காணவில்லையெனப் புகார் செய்யப்பட்டுள்ளது.

சிவானந்தன் என்ற இவ் ஊழியரின் வயோதிபத் தாயாரே இந்தப் புகாரைச் செய்துள்ளார். இவர் உப்புவெளிப் பொலிஸில் நேற்றுச் —4-ம் பக்கம் பார்க்க

## ஒரு சடலம்

அடையாளம் காணப்படாத பிச்சை எடுக்கும் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை இராணுவத்தினரால்யாழ். ஆஸ்பத்திரி — 4-ம் பக்கம் பார்க்க

## தமிழர்மீது ராணுவ அத்துமீறல்நடந்ததை ஜனாதிபதி ஜே. ஆர். ஒப்புக்கொண்டுள்ளார்

(கொழும்பு)

இலங்கையில தமிழர்களுக்கெதிராக இராணுவ அத்துமீறல்கள் நடைபெற்றுள்ளன என்பதை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்தன அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'நியூஸ் வீக்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

''தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாடு கோரிக்கையை கைவிட்டாலே இனி அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும், அல்லது பேச்சுவார்த்தைக்கே இடமில்லை.'' என்றும் ஜனாதிபதி இப்பேட்டியில் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி தனது இப்பேட்டியில் தெரிவித்திருப்பதாவது: ''இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இராணுவ அத்துமீறல் நடந்துள்ளன என்பதை நான் மறுக்கவில்லை. ஆயினும் இத்தகைய சம்பவங்கள் வேறு இடங்களிலும் நிகழ்ந்துதான் இருக்கின்றன

தமிழர் விடுதலைக் கூட்டணியுடனான பேச்சுவார்த்தை —4ம் பக்கம் பார்க்க

## புதிய இராணுவ முகாம்

வடமராட்சிப பகுதிக்கான வீதிகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதை அடுத்து தொண்டமானாறில் புதிய இராணுவ முகாமொன்று அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

# கொழும்பில் மர்மக் கடிதங்கள்!

# வெற்றியின் முன்னேற்றப் பாதை...

ஐந்து பாதைகளையும் குண்டு வைத்துத்தகர்த்ததற்கு தாமே பொறுப்பு என்று உரிமை கோரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடிதங்கள் நேற்று கொழும்பிலுள்ள சில பத்திரிகைக் காரியாலயங்களுக்குக் கிடைத்தது.

புலி இலச்சினை பொறிக்கப்பட்டு, ''தமிழீழ விடுதலைப் புலிகள்'' எனத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட கடிதத் தலைப்பில் ''முழுமையான வெற்றிக்கு முன்னேற்றப்பாதையில்'' என்று மகுடமிட்டு இக் கடிதம் அச்சடிக்கப்பட்டுள்ளது.

இக் கடிதத்தின் வாசகம் வருமாறு:–

''ஐந்து பாதைகளையும் உடைத்த இராணுவ நடவடிக்கைக்கு நாம் முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறோம். இந்நடவடிக்கைகள் எங்கள் இயக்கத்தால் எடுக்கப்பட்ட அதிமுக்கிய இராணுவத் திட்டமாகும்.

இன வெறிபிடித்த சிங்கள இராணுவம் இனிமேல் யாழ்ப்பாணத்தில் சுதந்திரமாக நடமாடமுடியாது. இராணுவ —4-ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டன் மனித உரிமை அமைப்பு

## ஈழத்தமிழர் படுகொலையை தடுத்து நிறுத்த ராஜீவை நேரில் சந்தித்துக் கோரிக்கை!

(புதுடில்லி)

இலங்கையில் தமிழர்கள் எண்ணிக்கையில்லாமல கைது செய்யப்படுவதையும், தொடர்ந்து படுகொலை செய்யப்படுவதையும் உடன் தலையிட்டுத் தடுத்து நிறுத்துமாறுபிரிட்டனிலுள்ள மனித உரிமைகளுக்கான அமைப்பு பாரதப் பிரதமர் திரு.ராஜீவ்காந்தியை நேரில் சந்தித்து வேண்டுகோள்விடுத்துள்ளது.

பிரிட்டனிலுள்ள மனித உரிமைக்கான அமைப்பின் தமிழகப் பிரிவு நிலைக்குழுவினர் பிரதமரையும் பாரதவெளிவிவகாரத் திட்டமிடல் குழுத்தலைவர் திரு ஜி பார்த்தசாரதி, மற்றும் உயர் அதிகாரிகளையும் புதுடில்லியில் சந்தித்து இலங்கைத் தமிழர்விடயத்தில்உடன் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்திக் கேட்டுக் கொண்டது.

''இலங்கையில் தமிழினம் சீரழிக்கபபடுகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமி —4-ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் ஒரு கொலை!

(வவுனியா)

வவுனியாவில் சிங்கள வர்த்தகர் ஒருவர் நேற்று இனம் —4-ஆம் பக்கம் பார்க்க

# இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி உடனே அரசியல் தீர்வுகாண ஜனாதிபதிக்கு மகஜர்

இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி இனப்பிரச்சனைக்கு ஒரு அரசியல் தீர்வை ஐ.ந. செயலாளர் நாயகத்தின் அல்லது அணிசேரா இயக்கத்தலைவர்களின் மேற்பார்வையில் ஏற்படுவதற்கான நடவடிக்கைகளைக் கூடிய விரைவில் ஜனாதிபதி ஏற்படுத்த வேண்டுமென சண்டிலிப்பாய் பிரஜைகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

குழுவின் செயற்குமிட்டிக் கூட்டத்தில் இலங்கையின் இனப்பிரச்சனையும் வடபகுதி மக்களின் நிலையும் ஆராயப்பட்டு பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இனப்பிரச்சனையை உண்மையாக அரசு தீர்க்க விரும்பினால் அதற்கு அரசியல் தீர்வே வழியாகும். அதன் முதற்படியாக அரசாங்கம் தனது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் அத்துடன் விடுதலை இயக்கங்களும் இராணுவத்துக்கெதிரான தமது தாக்குதலை நிறுத்த வேண்டும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது.

வங்காலைபங்குக்குரவர் பஸ்தியாம் கொலை செய்யப்பட்டதையும் அங்கு அகதிகளாக இருந்தோரையும் சாதாரண மானேரையும் சுட்டுக் கொன்று விட்டு அவர்களைப் பயங்கரவாதிகள் என அறிவித்ததையும், கன்னியஸ்திரிமடத்துள் ஆயுதப் படையினர் அத்துமீறிப் பிரவேசித்ததையும் வன்மையாகக் கண்டிக்கும் தீர்மானமும் ஆயுதப்படையினர் பொதுமக்களை வீதிகளிலும் வீடுகளிலும் கண்டபடி சுட்டுக் கொன்று விட்டு அவர்களைப் பயங்கரவாதிகள் எனக்கூறுவதை வன்மையாகக் கண்டிக்கும் தீர்மானமும் இத்தகைய நடவடிக்கைகளை உடன் தடுத்து நிறுத்த ஆவன செய்யுமாறு ஜனாதிபதியைக் கோரும் தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டன.

வடபகுதியின் மக்கள் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு, வாகனப்பாவிப்புத்தடை, உணவுத்தட்டுப்பாடு பொருட்களின் விலையேற்றம் என்பவற்றால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி அல்லலுறுவதை சுட்டிக் காட்டிய குழு கடல் சட்டங்களால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உணவு முத்திரை வழங்குவதைப் போல வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்டுள்ள சகல மக்களுக்கும் உணவு முத்திரைகள் வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தையும் எடுத்துள்ளது.


சோவியத் நாடு
சோவியத் சஞ்சிகைகள்
சீன சஞ்சிகைகள் —
அனைத்துக்கும் இவ்வாரத்துள்
சந்தாதாரர் ஆகுங்கள்
அனைவருக்கும்
இலவச கலண்டர்
அன்பளிப்பாக
உடனே வழங்கப்படும்
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.


## உங்களுடையதா?

அரியாலை கிழக்கு கனகரட்ணம் ஆனந்தன் என்பவரது அடையாள அட்டை (630≥2 1056V) கண்டெடுக்கப்பட்டு ஈழமுரசு அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.



## பிறந்தநாள் வாழ்த்து

✻ நாரந்தனை வடக்கு செல்வரட்ணம் இராசம்மா தம்பதிகளின் மகள் குமுதினி இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ இளவாலை, பெரியவிளான் செல்வராஜா இராஜினி தம்பதிகளின் மகள் அபிராமி இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ கொக்குவில் கிழக்கு மதியாபரம் மனோரஞ்சிதம் தம்பதிகளின் மகள் கலைவாணி இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்

✻ வத்தளை கெங்கி தோட்ட தேவதாஸ் ராஜலட்சுமி தம்பதிகளின் மகள் வினோதினி இன்று தனது பதின்மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ தும்பளை, நெல்லண்டை சிவானந்தம் ரதிதேவி தம்பதிகளின் மகன் சிவரூபன் இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ அரியாலை, இரத்தினராசா இராஜேஸ்வரி தம்பதிகளின் மகன இராகுலன் இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ வட்டக்கச்சி சிவக்கொழுந்து மங்கையற்கரசி தம்பதிகளின் மகன் அன்புச் சிறீதர் இன்று தனது பன்னிரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ நல்லூர், மூத்தவிநாயகர் வீதியைச் சேர்ந்த திருநாவுக்கரசு சிவானந்தம் தம்பதிகளின் மகன் சிவகுமார் இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## வசமாக அகப்பட்டனர்

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியில் 'தந்திக் கம்பிகள்' திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த கோஷ்டி ஒன்று இரவு நேரத்தில் வந்த இளைஞர் குழு ஒன்றிடம் வகையாக மாட்டிக் கொண்டது.

இத் திருட்டில் ஈடுபட்டிருந்த இரு ஆசாமிகள் நையப் புடைக்கப்பட்டதுடன் கம்பத்துடன் கட்டப்பட்டு பின் எச்சரிக்கை செய்யப்பட்டு அவிழ்த்து விடப்பட்டதாகவும் கூறப்படுகிறது


## வரி விளம்பரம்

### வாடகைக்கு

கச்சேரி பாடசாலைகளுக்கு அருகாமையில் ஆஸ்பத்திரி வீதியில் சகல வசதிகளையும் உடைய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: எஸ். அருளானந்தம்
இல: 874, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### பெயர் மாற்றம்

சாவகச்சேரியைச் சேர்ந்த சிவசக்திகுருசாமி ஆகிய நான் எனது பெயரை நிரஞ்சன குருசாமி என மாற்றிக் கொண்டேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

### விற்பனைக்கு

கொடிகாமம்- கண்டி வீதிக்கு அண்மையில் நன்கு பரப்பு வீடுகட்டக்கூடிய காணி விற்பனைக்குஉண்டு பரப்பு 10,000/-க்கு மேல். நேரில் வருக. அ. நடேசன் பற்றரி சார்சிங் நிலையம். பஸ்நிலையம் கொடிகாமம்.

### வீடு வாடகைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சகலவசதியும் கொண்ட அழகானவீடு வாடகைக்குண்டு பகுதியாகவோ / முழுமையாகவோ கொடுக்கப்படும். மேலதிகவிபரங்கட்கு.
ஸ்ரீ சக்தி ரேடர்ஸ்
A274, கே. கே எஸ் வீதி,
(சிவன்கோவிலடி)
யாழ்ப்பாணம்



யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வெளிநாட்டுப் பிரயாணத்திற்கான பிரயாணச் சீட்டுகளை யாழ். நகரிலேயே பதிவு செய்து கொள்ள — நம்பிக்கையாக நாடுங்கள்

CROSS TRAVEL SERVICES (PTE) LTD.,



Stage II, Model Market, No. 5, Ist Floor, Bus Stand, Centre Road, Jaffna.

குறிப்பு:
I பிரான்ஸ், கனடா, பேர்லின், ஹொலண்ட் (HOLLAND) பிரயாணங்களுக்கான சகல ஒழுங்குகளும் உடன செய்து கொடுக்கப்படும்.
II கொழும்பிலிருந்து லண்டன் செல்வதற்கான ஒழுங்குகளை ரூபா 20,000/- உடன் செய்து கொள்ளுங்கள்.
(CMB / LON / CMB - One Year Return Special fare Rs. 20,000/- only)

முக்கிய குறிப்பு:
கனடா செல்வதற்கான சகல ஒழுங்குகளும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

Phone: 22040, 22065
22816, 22817
Telex: 22207 (CTS) CE


உங்கள் இல்லத்திற்குத் தேவையான சகல விதமான மின்சாரப் பொருட்கள், சமையலறை உபகரணங்கள், ஆடம்பரப் பொருட்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

CROSS TECHNICAL SERVICES


## அந்தியேட்டி அழைப்பு

### கதிரவேலு அரவிந்தன் (ரவி)

தோற்றம்: 29 - 5 - 1965 மறைவு: 2 - 12 - 1984



எம்மை விட்டுப் பிரிந்த எமது ஆருயிரே! உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

5-1-1985 செவ்வாய்க்கிழமை அன்னாரின அந்தியேட்டி கிரியைகள் எமதில்லத்தில் நடைபெறும். உற்றார் உறவினர் யாவரையும பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோரும், சகோதரரும்
முட்டட்டி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு
கோண்டாவில்.


மாதாந்தம் 36% வட்டி விழாக்கால சலுகை!
15-12-84 முதல்
30-01-85 வரை
36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437
உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

### உதய சிந்தனை

சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்வதற்காகத் தன்னையும் தன் சொத்து சுகங்களையும் தியாகம் செய்ய முன் வராதவனுக்குச் சுதந்திரமோ சுய ஆட்சியோ இல்லை.
- மகாத்மா காந்தி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

15-1-85 செவ்வாய்க்கிழமை (இரத்தாக்ஷி தை 2)

# அங்கு எழுதிய கடிதத்திற்கு இங்கிருந்து வந்த பதில்!

நித்தம் நித்தம் தமிழ்ப்பகுதிகளில் இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றனர் ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லாத வேளைகளிலும், வீதிகளில் நடமாடுபவர்கள் சுட்டுக் கொலை செய்யப்படுகின்றார்கள்.

தந்தையுடன் சைக்கிளில் சென்ற பத்து வயதுச் சிறுவனும் பயங்கரவாதி. பாடசாலைச் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற 'பென்ஷன்' பெறும் வாத்தியாரும் பயங்கரவாதி.

கைது செய்யப்படும் பதினெட்டு வயதுக்கும் முப்பது வயதுக்குமிடைப்பட்ட இளைஞர்கள் அரசாங்க விருந்தாளிகள்.

தடுத்து வைக்கப்படுபவர்களின் பெயர்ப்பட்டியல்களைப் பெறுவது யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தின் மாமூல் வேலைகளில் ஒன்றாகிவிட்டது.

அழுது குழறிக் கொண்டு வரும் தாய்மாருக்கு ஆறுதல் கூறி வழியனுப்பி வைப்பது யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் அன்றாட கடமைகளில் ஒன்றாகி விட்டது.

தென்னிலங்கையில் தொண்டர் இயக்கங்கள் பாதுகாப்புப் படையினரின் தேவைக்கு நிதி சேகரிக்கின்றன.

வட இலங்கையின் தொண்டர் இயக்கங்கள் தமிழ் அகதிகளுக்கு உணவும் உடையும் சேகரிக்கின்றன.

சீருடையினருக்கு இரத்ததானம் சேகரிப்பு தெற்கே ஒரு 'திருவிழாவாக' நடத்தப்படுகின்றது.

வடக்கே அவசர நோயாளிகளுக்கு சத்திரசிகிச்சை செய்வதற்கு பிராணவாயு சிலிண்டர்கள் இல்லாமல் ஆஸ்பத்திரி நிர்வாகம் போராட்டம் நடத்துகின்றது.

மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கத் தடை. தொழிலின்றி, உண்ண உணவின்றி, பட்டினியால் வாடும் மீனவர்கள் உயிரைப் பிடித்துக் கொண்டு கடல் கடந்திருக்கின்றனர்.

லொறிகள், தனியார் பஸ்கள், மினிவான்கள் போக்குவரத்தின்மையால் வடக்கின் பொருளாதாரம் நாளாந்தம் தேய்ந்து கொண்டு போகின்றது.

இந்தநிலையில் ஆஸ்பத்திரியில் சூட்டுக்காயங்களுடனும், அடி காயங்களுடனும் அனுமதிக்கப்படுபவர்கள் தொகை மட்டும் அதிகரித்துக்கொண்டு செல்கிறது.

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்கு அடுத்ததாக, எலும்பு முறிவுடன் அடிகாயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரிச் செல்வோரே அதிகமாகும். அவ்வாறு அனுமதிக்கப்படுபவர்களுக்குச் சிகிச்சையளிக்கும் வைத்திய நிபுணரின் எலும்பை முறிக்கவும் சிலர் முயன்றுள்ளனர்.

தாககுதலுக்குள்ளான வைத்திய நிபுணரிடம் உயர் இராணுவ அதிகாரி மன்னிப்புக் கோரியதால் தொழிற்சங்க நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டன.

தாக்குதலுக்குள்ளான வைத்திய நிபுணரும் ஒரு மனிதர் தான் அவரது எலும்புகள் இரும்பினால் ஆனவை அல்ல. உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் அவர் எவ்வளவு பாதிப்புக்குள்ளாகியிருப்பார். சேவை ஒன்றையே நோக்கமாகக் கொண்ட அரசாங்க டாக்டருக்கு இந்தக் கதியென்றால் சாதாரண பிரஜையின் பாடு என்னபாடாக இருக்கும் என்பதை அவர்கள் உணர்ந்தார்களா ?

இரண்டு இன்ஸ்பெக்டர்களை விடுவிக்க வேண்டுகோள்விட்ட யாழ் மேற்றிராணியார், கதறியழும் தாய்மார் சார்பில் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்த கடிதம் சில தினங்களுக்கு முன் பத்திரிகைகளில் வெளியானது.

அநாவசியமாக இளைஞரைக் கைது செய்வதை நிறுத்துமாறும், கைதானவர்களை விடுதலை செய்யுமாறும் மேற்றிராணியார் ஜனாதிபதியிடம் கேட்டிருந்தார்.

நடந்தது என்ன?

அதே தினத்தில் யாழ் நகர் சுற்றி வளைக்கப்பட்டு இளைஞர்கள் கைதாகினர்.

அடுத்த நாள் பலாலியிலிருந்த அப்பாவி இளைஞர்கள் சரக்குக் கப்பலில் பூஸாவுக்கு அனுப்பப்பட்டனர்.

மறுநாள் வங்காலையில் வணபிதா. பஸ்தியன் படுகொலை.

மேற்றிராணியார் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்துக்கு 'உள்ளூர்' பெரியவர்களிடமிருந்து கிடைத்த உடனடிப் 'பதில்' என்று இதனை எடுத்தால், அதனைத் தவறென்று யாரும் சொல்ல முடியாது?

# அமெரிக்க உதவியுடன் சீன ராணுவம் நவீன மயமாகும்

## பீக்கிங் உயர்மட்ட சந்திப்பில் தகவல்

(பீக்கிங்)

அமெரிக்காவும், சீனாவும் இராணுவ உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வதெனத் தீர்மானித்துள்ளன. இந்த வகையில் இரு நாடுகளுக்குமிடையில் உடன்பாடு ஒன்றும் கைச்சாத்திடப்படும் என நேற்றுப் பீக்கிங் அறிக்கைகள் தெரிவித்தன. சீனாவுக்கு 1949ம் ஆண்டுக்குப் பின் முதல் தடவையாக அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் மேற்கொண்டுள்ள ஒருவார கால உத்தியோகபூர்வ விஜயத்தினையடுத்தே இவ்வுடன்பாடு உருவாகியுள்ளது.

அமெரிக்காவின் முப்படைத் தளங்களின் தலைவரான ஜெனரல் சார்பில் டபிள்யூ. வெஸ்லியே இந்த உயர்மட்ட இராணுவத் தலைவராவார். இவர் சீன இராணுவத்தளபதி ஜெனரல் யான் பேசியுடன் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். ஆசியாவுக்கும் மற்றும் உலக நாடுகளுக்கும் தம்மிடையே உருவாகும் இந்நல்லுறவு உதவும் என்று இரு தலைவர்களும் தெரிவித்தனர்.

சீனா தனது இராணுவத்தை நவீனமயப்படுத்த அமெரிக்காவின் உதவி பெறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது அமெரிக்க இராணுவத் தலைவர் சீனாவின் முக்கிய இராணுவத் தளங்களைப் பார்வையிட்டார். இரு தலைவர்களும் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து மேற்கொண்டு தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இது இவ்வாறு இருக்க அமெரிக்கப் போர்க் கப்பல்கள் சீனத் துறைமுகங்களில் தரித்துச் செல்ல சீனா சமீபத்தில் இணக்கம் தெரிவித்திருப்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

## துணை ஜனாதிபதி வாழ்த்து

(புதுடில்லி)

''யாவர்க்கும் வளமும் நல்வாழ்வும் பொங்கல் திருநாள் முதல் கிடைப்பதாக,'' என்று பாரத துணைஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் கூறியிருக்கிறார்.

தமிழக நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இந்திரா காங்கிரஸ் தமிழ் நாடு மாநிலத் தலைவர் திரு. எம். பழனியாண்டி, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. குமரி அனந்தன் முதலானோரும் பொங்கல் வாழ்த்துக்களைத் தெவித்துக் கொண்டுள்ளனர்.

### ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள்

## ஆக்கபூர்வ பலனளித்தது என்கிறார் ரஷ்ய அமைச்சர்

(மாஸ்கோ)

''இம்மாத முற்பகுதியில் ஜெனீவாவில் ஆயுதப்பரிகரணம் தொடர்பாக அமெரிக்கா ராஜாங்க மந்திரி திரு. சூல்ட்ஸுடன் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் பொதுவாக ஆக்கபூர்வமான விதத்தில் அமைந்திருந்தன'' என்று சோவியத்யூனியன் வெளிவிவகார மந்திரி திரு. குறொமிக்கோ நேற்று மாஸ்கோ டெலிவிஷனுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

''எனினும் விண்வெளியில் ஆயுதப்பாவனையை அதிகரிப்பதான அமெரிக்காவின் போக்கில் மாற்றம் உண்டாகியாக வேண்டும். அமெரிக்கா விண்வெளியில் ஆயுதப் பாவனை ஆராய்வைத் தொடர்ந்து நடத்துவது கவலைக்குரியது'' என்றும் திரு. குறொமிக்கோ சொன்னார்.

இதேவேளை விண்வெளியில் ஏவுகணைப்பாவனை ஆராய்வு முதலான நிகழ்வுகள் தொடர்ந்து தம்மால் நடத்தப்படவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது

### தைத் திருநாளில் எம். ஜி. ஆரின்

## இனிய வாழ்த்து: இம்மாத இறுதியில் சென்னை வருகை

(நியுயோர்க்)

''தமிழ் மக்களுக்குத் தைப்



பொங்கல் திருநாள் இனிதாக அமைய வாழ்த்துகிறேன்.'' என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நியுயோர்க் புறூக்லின் மருத்துவ மனையிலிருந்து விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

''நான் நலமடைய வழிபாடு நடத்திய யாவர்க்கும் என் நன்றி. நான் இம்மாத இறுதியில் தமிழகம் வந்து விடுவேன்'' என்றும் அவர் இச்செய்தியில் கூறியிருக்கிறார்.

## ஆப்கான். ஜனாதிபதி எண்ணம்

(லண்டன்)

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி பாப்ரக் கார்மல் ஈரானுடனும் பாகிஸ்தானுடனும் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்தும் எண்ணத்தை வெளியிட்டுள்ளார்.

## சீன விஜயம் உறுதி

(பீக்கிங்)

நோபல் பரிசு பெற்ற அன்னை திரேஸா சீன அரசின் அழைப்பையேற்று இம்மாதம் சீன விஜயம் மேற்கொள்வது உறுதி படுத்தப்பட்டிருக்கிறது.

### ஆஸி. மாஜிப் பிரதமர் கருத்து:

## "பாகிஸ்தான் நவன ஆயுதம் குவிப்பது ஆபத்தானது"

(புதுடில்லி)

''பாகிஸ்தானில் அதிநவீன ஆயுதங்கள் அதிகளவில் குவிக்கப்படுவது ஆபத்தானது'' என்று அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதம மந்திரி டாக்டர் புரூஸே கிரிஸ்க்கி நேற்று தனது பாரதத்துக்கான விஜயத்தின்போது புதுடில்லியில் வைத்துத் தெரிவித்தார். நவீன ஆயுதங்கள் நெறிமுறையற்றோரின் கரங்களில் சிக்கினால் கேடே விளையும்'' என்றார் அவர்.

''மேற்காசிய சிக்கல் நிலை குறித்து நான் பாரதத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன் சமாதானத்துடன் மனித குலம் தழைக்க வளரும் நாடுகள் மத்தியிலும் வளர்ந்த நாடுகள் மத்தியிலும் பேதங்கள் நீங்க வேண்டும். ஏழை நாடுகளுக்குப் பெருமளவு உதவ வேண்டும்'' என்று கூறிய டாக்டர் கிரிஸ்க்கி, ''அணு ஆயுதப் பரிகரணம் தொடர்பாக வல்லரசுகள் மத்தியில் இணக்கம் காணப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதே'' என்றும் கருத்து வெளியிட்டார்.

## பஸ் விபத்து

(ஸியோல்)

ஆற்றுடன் இணைந்த பாலமொன்றுடன் பஸ் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் சுமார் 38 பேர்வரை மாண்டிருக்கலாம் என தென்கொரிய பட்டணமான யோங்டொன் என்ற இடத்தில் இருந்து அறிவிக்கப்படுகிறது.

# ஈழமுரசு


மலிவான விமான டிக்கட்
சகல வெளிநாட்டு பிரயாண ஒழுங்குகள்
உடன் தொடர்பு கொள்க
திரு. மகேந்திரராசா
ராண்ஸ் யூரே ரவல்ஸ்
இல; 6, நவீன சந்தை, மேல்மாடி யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 23831


**700க்கும் அதிகமான சீருடையினர்**

# சாம்பல்தீவு, ஆசிமோட்டை சல்லியில்

# பத்துமணி நேரமாகக் கடும் சோதனை

(திருமலை)

திருகோணமலைப் பகுதியிலுள்ள சல்லி, சாம்பல் தீவு, ஆசிமோட்டை ஆகிய பகுதிகள் நேற்று முன்தினம் பாதுகாப்புப் படையினரால் முற்றுகையிடப்பட்டுப் பலத்த பாதுகாப்புக்கு உள்ளானது

எழு நூறுக்கும் மேற்பட்ட சீருடையினர் சுமார் பத்து மணித்தியாலங்களாக வீதிகளிலும் கடுமையான கண்காணிப்பு நடவடிக்கைகளையும் சோதனைகளையும் மேற்கொண்டனர்.

இராணுவ வாகனங்களும், கவசவண்டிகளும் கிராமங்களின் எல்லைகளில் காவல் நிற்க, சீருடையினர் நடந்து சென்று சந்தேகத்துக்குரிய இடங்களைப் பார்வையிட்டனர்.

சந்தேகத்துக்குரியவர்கள் எனத் தெரியவந்த சுமார் இருபத்தைந்து இளைஞர்கள் அவர்களால் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் சிலர் அன்றிரவே விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

## ஈழத் தமிழர்...

—1-ம் பக்கத் தொடர்

மூர் வகை தொகை இல்லாமல் தொடர்ந்து கைது செய்யப்படுகிறார்கள். படுகொலை செய்யப்படுகிறார்கள். எனவே பாரத அரசு இவ்விடயத்தில் உடன்தலையிட்டு இந்த அநீதிகளைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று இக்குழுவினர் பிரதமரிடமும் ஏனையோரிடமும் கேட்டுக் கொண்டதாக புதுடில்லி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன

இக்குழுவினர் 1983ம்ஆண்டு ஜூலை மாதத்தில் இலங்கையில் பெரிய அளவில் இனக் கலவரம் மூண்ட போதும் அன்று பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தியை நேரில் புதுடில்லியில் ஆகஸ்ட் மாதம் சந்தித்து இலங்கைத் தமிழர் இன்னல் குறித்து அவரிடம் எடுத்துரைத்ததுடன் இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கென 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையையும் பிரதமரிடம் அளித்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## கிளிநொச்சியில்...

—1- ஆம் பக்கத் தொடர்

ட்ராக்டர் வண்டியொன்று எரிக்கப்பட்டதுடன், கடையொன்றும், இரண்டு வீடுகளும் சீருடையினரால் தீமூட்டப்பட்டனவாம். ஆஸ்பத்திரி வாசலில் கார் ஒன்று எரிந்த நிலையில் நேற்று மாலை காணப்பட்டது. பல கடைகள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை பதினொரு மணியளவில் கரடிப்போக்குச் சந்தி பெற்றோல் நிலையத்துக்கு பொலிஸ் ஜீப்பொன்று பெற்றோல் அடிக்க வந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனராம் பொலிஸார் திருப்பிச் சுட்டதால் அவர்கள் மோட்டார் சைக்கிளை போட்டுவிட்டு ஓடினராம்.

பொலிஸார் துரத்திச் சென்ற போதே ஒழுங்கையொன்றுக்குள் வைத்துக் குண்டு வீசப்பட்டதாகவும், சார்ஜன்ட் சிறிபால ஸ்தலத்தில் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகின்றது

## தமிழர் மீது,..

1-ம் பக்கத் தொடர்

கள் அவர்கள் தனிநாடு கோரிக்கையை கைவிட்டால் மட்டுமே இனிமேல் நடைபெறும். சர்வகட்சி மாநாடு வெற்றிபெறவில்லை. உள்ளுக்குள் உண்டான வலுவான எதிர்ப்பின் மத்தியிலும் பாராளுமன்றத்திலும், அமைச்சரவையிலும் சர்வகட்சி மாகாட்டு யோசனைகளைச் சமர்ப்பித்துச் சில சலுகைகளை வழங்கத் தயாராக இருந்தேன். பாராளுமன்றம் அவற்றை நிராகரித்தால் மக்கள் முன் அந்த யோசனைகளைச் சமர்ப்பித்து தேர்தலை நடத்தியிருப்பேன். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அந்த யோசனைகளை ஏற்க மறுத்துவிட்டனர்.

இலங்கைப் பிரிவினைவாதிகளுக்கு இந்தியா உதவக் கூடாது அந்நாட்டுப் பிரதமர் ராஜீவைச் சந்திக்கையில் இது குறித்தும் பேசுவதற்கு உள்ளேன் எனவும் குறிப்பிட்டார்.

## ஒரு சடலம்..

—1ம் பக்கத் தொடர்

யில் ஒப்படைக்கப்பட்டது. நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் மார்க்கட் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளின் போது இவர் சுடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## வவுனியாவில்..

—1ம் பக்கத் தொடர்

தெரியாதவர்களால் சொல்லப்பட்டார். அவரது சடலம் உடனடியாக வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.


**ST·JOHN'S COLLEGE-JAFFNA**

**VACANCIES**

WANTED IMMEDIATELY MALE GRADUATES OR GRADUANDS TO TEACH CHEMISTRY AND ZOOLOGY IN THE ADVANCED LEVEL CLASSES.

PLEASE MEET PRINCIPAL WITH CERTIFICATES ON SATURDAY, 19th JANUARY AT 9 A.M.

THANKS.

PRINCIPAL


# இன்றுமுதல்22ம்திகதிவரை குருநகர்வங்கியில்பென்ஷன்

இம்மாதம் வழங்கப்படும் ஓய்வூதியம் இன்று பதினைந்தாம் திகதிமுதல் இருபத்திரண்டாம் திகதிவரை குருநகர் இலங்கை வங்கியில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இதன் பிரகாரம் பின்வரும் அட்டவணைப்படி அவை வழங்கப்படும் 15ம் திகதி (செவ்வாய்) காரைநகர், அளவெட்டி, புங்குடுதீவு, வசாவிளான், நயினாதீவு, அனலைதீவு, கைதடி, வேலணை, 16ம் திகதி (புதன்) நெடுந்தீவு, பண்டத்தரிப்பு, கொடிகாமம், மானிப்பாய், உரும்பராய், வட்டுக்கோட்டை சங்கானை, 17ம் திகதி (வியாழன்) யாழ்ப்பாணம், கோப்பாய், அச்சுவேலி, சுழிபுரம், 18ம் திகதி (வெள்ளி) யாழ்ப்பாணம், கொக்குவில், சாவகச்சேரி, வண்ணார்பண்ணை, காங்கேசன்துறை 21ம் திகதி (திங்கள்) தெல்லிப்பளை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, 22ம் திகதி (செவ்வாய்) சுன்னாகம், கரவெட்டி, ஊர்காவற்துறை.

# வடமராட்சிப் பாடசாலைகள் கல்வி மோசமாகப் பாதிப்பு

(புலோலி)

வடமராட்சிப் பகுதியின் மிகப் பிரபல்யமான கல்லூரிகளான பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி மாணவ, மாணவிகளின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள் சீரழிந்துள்ளதாகப் பெற்றோர்கள் பெருங் கவலையடைந்துள்ளனர்

இக்கல்லூரிகளின் மாணவ, மாணவிகளின் வரவு 50, 60 ஆகவே உள்ளது. இவ்விரு கல்லூரிகளுக்கும் அருகாமையில் பாதுகாப்புப் படையினரின் கூட்டு முகாம் இயங்கி வருவதனால் இக்கல்லூரிகளுக்குத் தமது பிள்ளைகளை அனுப்ப முடியாதுள்ளதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

மெதடிஸ்த பெண்கள் கல்லூரியிலேயே ஹாட்லிக் கல்லூரியின் 6ம், 7ம், 8ம், 9ம், 10ம் வகுப்புகளையும், 11ம்,12ம் வகுப்புகளை ஹாட்லிக் கல்லூரி மாணவர் விடுதியிலும் நடாத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

## கொழும்பில்...

—1-ஆம் பக்கத் தொடர்

முகாம்களைத் தனிமைப்படுத்தி ஒவ்வொன்றாக அழித்தொழிக்கும் வாய்ப்பு இப்போது எமக்குக் கிடைத்துள்ளது.

எனவே நாங்கள் நடத்தியுள்ள செயல்களின் பிரதிபலிப்பு ஈழப் போராட்டத்துக்கும், எமது இயக்கத்துக்கும் கிடைத்துள்ள மாபெரும் வெற்றி என ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

சிங்கள இராணுவத்தை ஈழத்தில் ஒழித்ததன்பின் நாங்கள் எங்கள் கொடியை உயர்த்தி மீண்டும் ஈழத்தைக் கட்டி எழுப்புவோம்! ''வெல்க தமிழீழம், புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்'' என்று இங்கு பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

இக்கடிதங்கள் யாரால், எப்படி கொழும்பில் விநியோகிக்கப்பட்டன என்பது மர்மமாகவே இருக்கிறது.

## பொலிஸார்..

1-ம் பக்கத் தொடர்ச்சி

சென்று விசாரித்த போது சிவானந்தன் கைது செய்யப்பட்ட அன்றைய தினமே விடுதலை செய்யப்பட்டுவிட்டதாக பதிலளிக்கப்பட்டதாம்.

இதனால் தனது மகனுக்கு உயிராபாயம் ஏதாவது ஏற்பட்டிருக்கலாமென்று வயோதிபத் தாய் சந்தேகம் கொண்டுள்ளார்.

## ஐந்து பிரதான...

—1ம் பக்கத் தொடர்

துடன் இக்குண்டுகள் அடுத்தடுத்து வெடித்தன. இவைகளைத் தமிழர் விடுதலைப் புலிகள் செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்களும், வல்வை இராணுவ முகாமும் தீவிரவாதிகளால் தாக்கப்படலாமென்ற பீதியினால் இப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.

ஐந்து வீதிகளும் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையிலிருப்பதால யாழ். நகரில் அலுவலகங்கள், பாடசாலைகள், வர்த்தக வேலைகளுக்காக வருபவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## சம்பூரில் சின்னமணி சுட்டுக்கொலை

(திருமலை)

மூதூரிலுள்ள சம்பூர் என்ற இடத்தில் சின்னமணி (42) என்ற நபர் துப்பாக்கி ஏந்தியவர்களால் அவரது வீட்டிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொலை செய்யப்பட்ட சர்பவம்நேற்று முன்தினம் நடைபெற்றது.

## 9 இடமாற்றம் ரத்தானது

(சுண்டுக்குளி)

யாழ். மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு யாழ். செயலக பரிபாலனப் பகுதியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட 29 எழுதுவினைஞர்களில் ஒன்பது பேரின் இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. பொது எழுதுவினைஞர் சேவையைச் சேர்ந்த இவ்வூழியர்கள் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். யாழ். செயலக நிர்வாகப் பகுதியிலிருந்து நால்வர் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர்.

## யாழ்ப்பாண...

—1-ம் பக்கத் தொடர்

குவரத்துப் பிரச்சினை, ஊரடங்குச் சட்ட நிலைமைகளை எடுத்துக்கூறி ஒரு நேரப் பாடசாலை நடத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர்.

திரு. விஜேமான நிலைமையை அனுசரித்து கோரிக்கையை ஏற்றுக் கொண்டார். யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. எம் சிமியாம்பிள்ளையும், அரசாங்க அதிபரும் இன்று இது சம்பந்தமாக முடிவெடுத்து அறிவிப்பார்கள்

இதற்கிடையே யாழ்ப்பாணம் நல்லூர் தொகுதி பாடசாலைகள் முதலாம் தவணைக்காக இன்று திறக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.


## மரண அறிவித்தல்

### திருமதி பராசக்தி செல்லையா

காலமானார் அன்னார் பண்டாரவளை அர்ச். சூசையப்பர் கல்லூரி உதவி அதிபராகவிருந்து இளைப்பாறிய ஆ. செல்லையாவின் அன்பு மனைவியும், யாழ்ப்பாணம் அரசினர் மருத்துவமனை அத்தியட்சகர் டாக்டர் நச்சினார்க்கினியன், இந்துமதி ஆகியோரின் அன்புத் தாயரும், சரோஜாதேவி, சண்முகம் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற திருமதி இரத்தினபாக்கியம் சோமசுந்தரம், சிவசிங்கம், திருமதி பானுமதி நல்லைநாதன் ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-1-85 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு 39 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.



'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப்பகுதியில 15-1-85 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.